புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# குறிஞ்சி நில மக்களின் மானுடவியல் பண்புகள்

**நெறியாளர்**
**முனைவர் இரா.கலைச்செல்வி**
*உதவிப்பேராசிரியர் & துறைத்தலைவர்*
*தமிழாய்வுத்துறை*
*திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,*
*இராசிபுரம் 637 401.*

**ஆய்வாளர்**
**ந.இந்திரா**
*முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்*
*தமிழாய்வுத்துறை,*
*திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி,*
*இராசிபுரம் 637 401.*

## ஆய்வுச்சுருக்கம்

*குறிஞ்சி நிலம் என்பது பண்டையத் தமிழகத்தில் பகுத்த அறியப்பட்ட ஐந்து வகை நிலங்களில் ஒன்றாகும். மலையும் மலைசார்ந்த பகுதி என்றும் அழைக்கப்படுகின்றனர். குறிஞ்சி நில கடவுளான முருகனை சேயோன் என்று பழந்தமிழர் அழைத்தனர். குறிஞ்சி நில மக்களுக்கு பல்வேறு வகையான பெயர்கள் காணப்பட்டனர். அவர்களின் உணவு இயற்கையாக கிடைத்த காய் கனிகள் மற்றும் இறைச்சியை பகுத்து உண்டனர். பல்வேறு வகையான ஆடை அணிகலன்களையும் அணிந்திருந்திருந்தனர். பகல் பொழுதில் வேட்டையாடுதல் தேன் எடுத்தல் போன்ற தொழில்களை மேற்கொண்டனர். அவர்களின் திருமண முறை சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் நடைபெற்றது. குறிஞ்சி நிலப் பகுதிகளின் மக்கள் பண்டமாற்று முறையிலும் ஒற்றுமையாகவும் வாழ்ந்துள்ளனர்.*

## முன்னுரை

*சங்க கால மக்கள் வாழ்க்கை வரலாறுகள் சமுதாய நடைமுறைகள் வாணிபம் ஆட்சி முறைகள் ஆகியவற்றை சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது. சங்ககாலம் கி.மு.1000 முதல் கி.மு.250 வரை என்பது ஆய்வாளர்களின் முடிவு ஆகும். இக்காலகட்டத்தில் வாழ்ந்த பண்டையத் தமிழர்களுடைய வாழ்க்கை முறைகளை அறிந்துகொள்ள பெரிதும் உதவும் நூல்கள் சங்க இலக்கியம் ஆகும். பண்டையத் தமிழர் வாழ்க்கையை ஆகும். புறம் என்று பிரித்து வாழ்ந்தனர். மக்களின் வாழ்க்கை முறை, உணவு, வாணிபம், ஆட்சி முறை, பழக்க வழக்கங்கள், திருமணம் ஆகியவற்றைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

## ஆய்வு நெறிமுறை

*இவ்வாய்வில் விளக்க முறை பகுப்புமுறை என்னும் இரு ஆய்வு அணுகுமுறையை பின்பற்றப்பட்டுள்ளது. இதில் மானுடவியல் பற்றி சுருக்கமாகவும் குறிஞ்சி நில மக்களின் மானுடவியல் பண்புகள் பற்றி விரிவாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.*

## மானுடவியல்

*மானுடவியல் என்து ஒவ்வொரு நாட்டினருக்கும் ஒவ்வொரு விதமான பண்புகள் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக ஐரோப்பாவில் ஒருவிதமாகவும், அமெரிக்காவில் ஒரு விதமாகவும், இங்கிலாந்தில் ஒரு விதமாகவும் சமுதாய அமைப்பு காணப்படுகிறது. அமெரிக்க மானிடவியல்களின் தத்துவத்திற்குள் இணைக்கப் பெற்று இன்று சமூக – பண்பாட்டு மானிடவியல் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அந்தந்த மரபிற்கு ஏற்ப மானிடவியல் தோன்றின.*

***சமுதாய மானுடவியல் கூறுகள்***

*சமுதாயம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மனித இனத்தவர் தங்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திக் கொண்ட ஒரு கூட்டமைப்பு ஆகும். அக்கூட்டமைப்பில் வாழும் மனிதனின் நடத்தைகள், செயல்கள், பழக்கவழக்கங்கள், விதிமுறைகள், கட்டுப்பாடுகள் போன்றவற்றைக் குறிக்கும்.*

*சங்க இலக்கியத்தில் சமுதாய முறைகள், குடும்பம், திருமணம், உறவுமுறைகள், உணவு ஈட்டுதல், பண்மாற்ற முறைகள், சமய நம்பிக்கைகள், அரசியல், சமூக ஒழுங்கு முறைகள் ஆகியவை ஆகும்.*

***குறிஞ்சி நில மக்கள் பெயர்கள்***

*மக்கள் வாழ்க்கையை அவர்கள் வாழும் சூழல் நோக்கிலும், தொழில் நோக்கிலும் இலக்கியங்களில் பெயரிட்டு அழைத்தனர். குறிஞ்சி நில மக்களை பொதுவாக குறவர் குன்றவர் என்று அழைப்பர். குறிஞ்சி நிலக் கானத்தில் வாழ்வோரை கானவர் என்றும், குறிஞ்சியில் வாழ்வோரை குறவர் என்றும் குன்றுகளிலும் கொடுமுடிகளிலும் வாழ்வோரை குன்றவர், கொடிச்சியர் என்றும் பொதுவாக வேட்டையாடுபவரை கானவர், வீளையர், மறவர், மலையர், என்று அழைப்பர். கொடிய வில்லை கையில் வைத்திருப்பவரை கண்ணியன், வில்லன், கழலன், தாரன் என்று அழைப்பர். குறிஞ்சி நில ஆண்களை நாடன், வெற்பன், சிலம்பன் என்றும் பெண்களை கொடிச்சி, குறமகள் என்றும் அழைப்பர்.*

***குறிஞ்சி நில மக்களின் உணவு முறைகள்***

*குறிஞ்சி நில மக்கள் தொழிலால் தங்கள் வாழ்வை மேம்படுத்திக் கொண்டனர். அவர்களின் வலிமைக்குக் காரணம் இயற்கையாக எளிதில் கிடைக்கப் பெற்ற காய் கனிகளும் இறைச்சியும் உண்டனர். ஐவனநெல், தினை, மூங்கிலரிசி, கிழங்கு வகைகள், தேன் போன்றவற்றை மிக முக்கிய உணவாக உண்டனர். கானவர் வில்லாற் கொன்று வந்த முள்ளம் பன்றியின் ஊனை மனைமகளிர் துண்டித்து ஊரிடத்து வாழ்வோரைது குடிமுறைக்கேற்ப பகுத்தளிப்பர். இதனை,*

***“……………………………………………….கானவர்***

***வில்லின் தந்த வெண்கோட்டேற்றைப்***

***புனையிருங் கதுப்பின் மனையோள் கொண்டிக்***

***குடிமுறைப் பகுக்கும்…………..”[1] (நற்.336. வ.3-6)***

*என்பர் கபிலர். இவர்கள் ஒரு குழுவாக வேட்டையாடி உணவை பகுத்துக் கொண்டனர். கானவர் இரவில் மூங்கிலரிசி சோற்றில் நெல்லரிசி விரவி அவரை விதையாற் சமைத்த புளிங்கூழை இரவு உணவாக உண்பர். குறிஞ்சி நில மக்களுள் பெரும்பான்மையோர்கள் கள் குடிக்கும் பழக்கம் கொண்டவர்களாக இருந்துள்ளனர். கள் பல விதப் பொருட்களைக் கொண்டு அவர்களே தயாரித்தனர். அவற்றை அருந்திய பின் ஏற்படும் மயக்கம் குறித்தும் அகநானூற்றுப் பாடல் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

***“தேன் தேர் சுவைய, திரள் அரை, மாஅத்து***

***கோடைக்கு ஊழ்த்த கமழ்நறுந் தீம்கனி***

***புயிர்ப்புறப் பலவின் எதிர்ச்சுளை அளைஇ,***

***இறாலொடு கலந்த, வண்டுமூசு, அரியல்***

***நெடுங்கண் ஆடு அமைப் பமுநி, கடுந்திறல்***

***பாப்புக் கடுப்பு அன்ன தோப்பி வான்கோட்டுக்***

***கடவுள் ஓங்குவரைக்கும் ஒக்கி, குறவர்***

***முறித் தழை மகளிர் மடுப்ப மாந்தி,"[2] (அகம்.348, வ.1-8)***

*குறத்தியர் முற்றத்தில் இருந்துகொண்டு தோப்பி என்னும் கடுப்புச் சாற்றை ஊற்றித் தர அதனை உண்ட குறவர் தினைப்புனம் காக்கச் செல்ல மறந்ததால் யானைகள் தினையைச் சேதம் விளைவிக்கின்றன. அதை கண்டு குறமகள் வருத்தம் அடைகிறாள் என்று அகநானூற்றுப் பாடல் சிறப்பாகக் குறிப்பிடுகிறது.*

***ஆடை அணிகலன்கள்***

*ஆடை அணிவதோடு தங்களை அழகுபடுத்துவதற்கு அணிகலன்கள் தேவை எனப் பண்டைய மகளிர் உணர்ந்திருந்தனர். சங்க காலங்களில் தழையாடை, தோலாடை, மரவுரியாடை போன்ற ஆடை வகைகள் மிகுதியாக காணப்பட்டன. சங்க காலங்களில் ஆடைகளை உடை, தழை, துகில், கலிங்கம், அறுவை, ஆடை, உடுக்கை, கச்சி, ஈரணி, தானை, போர்வை, காழகம், கச்சை, வம்பு, மடி, பட்டு, சீரை, படம், பாடம், பூங்கரை நீலம், கம்பலம், கவசம், தூசு, மடிவை, சிதர் சிதவல், வார், மெய்ப்பை, மெய்ம்மறை, மெய்யாப்பு, வெளிது, ஒலியல், புட்டகம், நூல், பக்குடுக்கை போன்ற சொற்களைக் கொண்டு ஆடைகளை அழைப்பர். இளைய மகளிர் தழையாடை அணிந்தனர் என்பதைப் பாடற்குறிப்புகள் மூலம் அறியலாம். இதனை,*

***"பெரும்புலர் விடியலின் விரும்பிப் போத்தந்து***

***தழையும் தாரும் தந்தனன், இவன்"என,***

***இழை அணி ஆயமொடு தகுநாண் தடைஇ"[3] (நற்.80, வ.4-6)***

*என்று நற்றிணைப் பாடல் குறிப்பிடுகிறது. ஆடை உடுத்திக் கொண்டதை விட அணிகலன்களால் தங்களை அழகுபடுத்திக் கொண்டனர்.*

***"மின்னு நிமிர்ந்தன்ன கனங்குழை"***

***"சுடரிழை"***

***"ஒண்டொடி"***

***"நெருப்பென மிளிரும் மணிப்பூண்"***

***"சேண்விளங்கு அல்வளை"***

*என்று சங்க கால மகளிர் ஒளிர்மிக்க அணிகலன்களை விரும்பி அணிந்தனர் என்று சங்கப் பாடல்கள் மூலம் தெரிந்து கொண்டனர்.*

***கூந்தல் ஒப்பனை***

*ஒரு நாட்டு மக்களுடைய அழகுணர்ச்சியின் அளவுகோல் அமைவது ஒப்பனைக் கலை ஆகும். அழகில் சற்றுக் குறைந்த மகளிர் அழகுடையவர்களாகக் காட்சியளிக்கவும், அழகுடையவர்கள் மேலும் அழகுடையவர்களாகக் காட்சியளிக்கவும் ஒப்பனைக் கலை பயன்படுகிறது. ஒப்பனைக்கலை வாயிலாக மகளிரின் கற்பனை வளத்தையும், அழகியல் உணர்ச்சியையும் அறிய முடிகின்றது. சங்ககால மகளிர் ஒப்பனைக் கலையில் சிறந்து விளங்கியுள்ளனர். ஒப்பனைக்கு இயற்கையில் கிடைக்கும் மணப் பொருட்களையும் வண்ணச்சாந்துகளையும் பயன்படுத்தியுள்ளனர். சங்க இலக்கியத்தில் ஒப்பனை என்னும் சொல் அழகு, கோலம், வனப்பு, கவின், எழில் போன்ற பல சொற்கள் பயன்படுத்தினர். சங்க கால மகளிரின் ஒப்பனைகளாகக் கூந்தல் ஒப்பனை, முக ஒப்பனை, நக ஒப்பனை*

*உடல் ஒப்பனை போன்றவற்றை குறிப்பிடுகின்றனர். குறிஞ்சிப் பாட்டில் தலைவி தன் தோழிகளுடன் தினைப்புனம் காக்கச் சென்று சுனையில் நீராடித் தொண்ணூற்று ஒன்பது மலர்களைப் பல இடங்களில் திரிந்து பறித்து அவற்றைப் பாறையில் குவித்து மாலையாகத் தொடுத்துத் தம் கூந்தலில் சூடிக் கொண்டனர்.*

*தலைவி ஒருத்தி கூந்தலில் காட்டு மல்லிகை, பாதிரி, செங்கருங்காலி ஆகிய பல மலர்களைச் சூடியிருப்பதால் அக்கூந்தல் நறுமணம் வீசக்கூடிய ஒரு பூஞ்செப்பினைத் திறந்து வைத்தாற் போன்று மணம் வீசியதை நற்றிணைப் பாடல் சிறப்பாகக் குறிப்பிடுகிறது.*

***"முதிரா வேனில் எதிரிய அதிரல்***

***பராரைப் பாதிரிக் குறு மயிர் மாமலர்***

***நறு மோரோடமொடு, உடன் எறிந்து அமைச்சி***

***செப்பு இடந்தன்ன நாற்றம் தொக்க உடன்"[4] (நற்.337, வ.3-6)***

*கூந்தல் ஒப்பனையைப் பற்றிச் சங்க இலக்கியப் பாடல் சிறப்பாகக் குறிப்பிடுகிறது.*

***குறிஞ்சி நில மக்களின் பகல் வாழ்க்கை***

*குறவர் பகற் பொழுதில் மலை உச்சியில் இருக்கும் தேனை எடுப்பதை நடைமுறையாகக் கொள்வர். மலைப்பகுதியில் இயற்கையாக விளைந்து இருக்கும் கிழங்குகளைச் சேகரிப்பர். தினை விதைத்தல், தினை காத்தல், தினை அறுத்தல், தினை குற்றுதல் போன்ற செயல்பாடுகளில் இருபாலரும் ஈடுபடுவர். தினைப் பயிர் முற்றிய பொழுது அதனைக் காப்பதில் குற மகளிர் பெரும் பங்கு வகிப்பர். குறிப்பாகத் திருமணமாகாத மகளிர் இதில் சிறப்பாக ஈடுபடுவர். பெற்றோர் தம்மைத் தினைப்புனம் காக்க அனுப்பாத குறமகளிர்,*

***"………………………………………………………… பெருங்குரல் ஏனல்***

***கிளிபட விளைந்தமை யறிந்துஞ் செல்கென***

***நம்மவண் விடுறள் போலாள்"[5] (அகம்.302, வ.10-12)***

*என வருந்துவர். தினைப்புனம் காக்கச் செல்லும்போது தோழியருடன் கூட்டமாகச் செல்வர். மூங்கிலாற் செய்த தட்டையைப் புடைப்பர். தினைப்புனங்களில் வரும் கிளியை ஆரவாரமாக ஒட்டுவர்.*

***பண்டமாற்று முறை***

*குறவர் தம் நிலத்தில் கிடைக்கும் பொருட்களைப் பண்டமாற்றாகப் பயன்படுத்துவர். ஆமாவின் இறைச்சியுடன் களிற்றியானையின் கோட்டையும் கொண்டு வந்து கொடுத்து விட்டு அவற்றின் விலைக்கு ஈடாகப் பொன்னையும் கள்ளையும் பெறுவர். இதனை,*

***"செங்கோட் டாமானூனொடு காட்ட***

***மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு***

***பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்கும்"[6] (பதி.30, வ.10-12)***

*என்பர். சிறுகுடியிலுள்ள குறவர் உணவின்றிப் பசித்தவர்க்கு யானைக்கோட்டை விற்று அவ்விலையில் உணவை வாங்குவர். இதனை,*

***"காத்தள் வேலிச் சிறுகுடி பசிப்பிற்***

***கடுங்கண் வேழத்துக் கொடுநொடுத்***

***துண்ணும்"[7] (குறு.100, வ.3-4)***

*என்ற குறுந்தொகைப் பாடல் மூலம் சங்க கால மக்கள் பண்டமாற்று முறையை மேற்கொண்டனர் என்று நாம் அறிந்து கொள்ளலாம்.*

### தொழில்கள்

*குறிஞ்சி நில பகுதிகளில் முக்கிய தொழிலாக தினை விளைவித்தல், தினை காத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் வேட்டையாடுதல், தினை காத்தல், தினை கொய்தல், தினையைப் போரடித்தல், தினை காய வைத்தல், தினை குற்றுதல், களையெடுத்தல் போன்ற தொழில்களில் ஆண்களும் பெண்களும் ஈடுபட்டனர். குறவர்களுக்கு வேட்டையாடுதல் முக்கிய தொழில் ஆகும். வில்லும், அம்பும் இவர்களுடைய ஆயுதம் ஆகும். வேட்டையாடுவதற்கு நாய்களை உடன் அழைத்து செல்வர்.*

***“அரவு இரை தேடும் ஆர் இருள் நடு நாள்***

***இரவின் வருதல் அன்றியும், - உரவுக் கனை***

***வன் கைக் கானவன் வெஞ்சிலை வணக்கி***

***உளமிசைத் தவிர்த்த முளவுமான் ஒற்றையொடு***

***மனைவாய் ஞமலி ஒருங்கு புடை ஆட,***

***வேட்டு வலம் படுத்த உவகையன் காட்ட***

***நடுகாற் குரம்பைத் தன் குடிவயிற் பெயரும்***

***குன்ற நாடன் கேண்மை நமக்கே”[8] (நற்.235, வ.1-8)***

*என்று நற்றிணைப் பாடல் குறிப்பிடுகிறது. சந்தனம், அகில் போன்ற மரங்களை அழித்து நிலத்தைத் திருத்தித் தினை பயிரிடுவர். இரவில் யானைகள் புனத்தை அழித்து விடாதபடி பரணிலிருந்து குறவர் காவல் புரிவர். இரவில் தீக்கொள்ளிகளை எறித்து யானைகளை விரட்டுவர்.*

***“துணையின் தீர்ந்த கடுங்கண் யானை***

***அணையக் கண்ட அம்குடிக் குறவர்***

***கணையர், இணையர், கைபுனை கவணர்***

***விளியர், புறக்குடி ஆர்க்கும் நாட”[9] (நற்.108, வ.2-5)***

*குறவர்கள் யானையை ஓட்டிய செய்தியைப் பற்றி நற்றிணைப் பாடல் குறிப்பிடுகிறது. குறவர் முசுகலை ஏற முடியாத மலை உச்சியில் கண்ணேணியை வைத்து அதன் மீது ஏறுவர். தேனீக்களை ஈட்டி வைத்து தேனை எடுப்பர். கண்ணேணி என்பது மூங்கில் மரத்தில் அதன் கணுக்கல் படிபோன்று அமைத்து அதன் மேல் ஏறி தேனை எடுப்பர் இதனை மால்பு என்று அழைப்பர். இதனை,*

***“பெருந்தேன் கண்படு வரையில் முதுமால்பு”[10] (குறு.273, வ.5)***

*என்று குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது.*

### திருமண உறவு

*சமுதாயத் தொடர் வாழ்வில் பருவம் எய்திய ஓர் ஆணும் பெண்ணும் ஈடுபடுவதற்கான இணைப்பு திருமணம் ஆகும். உலகிலுள்ள எவ்வகைச் சமுதாயத்திலும் பன்னெடுங்காலமாக இந்த முறை காணப்படுகிறது. பெர்டரண்டு ரஸ்ஸல் என்பவர் திருமணம் என்பது சட்டமுறைப் படி அமையும் சடங்கு என்றும், அது பல சமூகங்களில் ஒரு மத ஏற்பாடாகக் காணப்படுகிறது என்றும் குறிப்பிடுகிறார். திருமணத்தைக் குறிக்கும் சங்ககாலச் சொற்களான வரைவு, வதுவை, மன்றல், கரணம், மணம் முதலிய சொற்களைக் கொண்டு அழைப்பர். திருமணத்துக்குரிய பொருத்தங்களை தொல்காப்பியர்*

*குறிப்பிடுபவை பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டோடு, உருவு, நிறுத்த காமவாயில் நிறையே அருளே, உணர்வொடு திரு என முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே என்று குறிப்பிடுகிறார். சங்ககால திருமண முறையைப் பற்றி அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றன.*

***"கற்பினில் வழாஅ நற்பல உதவிப்***

***பெற்றோர் பெட்கும் பிணணை ஆக என***

***நீரொடு சொரிந்த ஈர் இதழ் அலரி***

***பல் இருங் கதும்பின் நெல்லொடு தயங்க***

***வதுவை நல்மணம் கழிந்த பின்றை***

***கல்லென் சும்மையற் ஞெரேரெனப் புகுந்து***

***போரிர் இற்கிழித்தி ஆக எனத் தமர்தர***

***ஓர் இற்கூடிய உடன் புணர்கங்குல்"[11] (அகம்.86, வ.13-20)***

*எனத் திங்களும் ரோகினியும் கூடிய நன்னாளல் திருமணம் நடந்தது. திருமணம் வைகறைப் பொழுதில் நடத்தினர். திருமண பந்தலில் புதுமணல் பரப்பி விளக்கினை ஏற்றி மாலைகளைத் தொங்க விட்டு அழகுபடுத்தினர். பெரியவர்களால் வாழ்த்தி திருமணம் நடைபெற்றது. திருமண விருந்தில் இறைச்சி கலந்த வெண்சோற்றை விருந்தினருக்கு அளித்தனர். இதனை,*

***"மைப்பு அறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு***

***வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி***

***புள்ளுப் புணர்ந்து இனிய ஆக தெள் ஒளி***

***அம்கண் இருவிசும்பு விளங்கத் திங்கட்***

***சகடம் மண்டிய துகள் தீர் கூடத்து***

***கடிநகர் புனைந்து கடவுள் பேணி***

***படுமண முழவொடு பரூஉப்பனை இமிழ***

***வதுவை மண்ணிய மகளிர்"[12] (அகம்.136, வ.1-8)***

*என அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது. வெண்ணிற சோற்றுடன் இறைச்சியைக் கலந்த உணவினை அனைவருக்கும் விருந்தளித்தனர். மேலோர்களைப் பேணி வழிபட்ட பின்னர் உணவு வழங்கப்பட்டன. மணப்பந்தலில் (கடிநகர்) அதற்குப் புள் (பறவைச் சகுனம்) நல்லதாக அமைந்த தோம்தில் திருமணம் நடைபெற்றது.*

***கடவுள் வழிபாடு***

*குறவரும் குறவர் மகளிரும் மலைக்கடவுளை வாழ்த்தி வணங்குவர். குறிஞ்சி நில கடவுளான முருகனை வேங்கை மலராற் பூசித்து தம் குடும்பத்தோடு கூடி வணங்குவர். இதனை,*

***"குன்றக் குறவன் காதல் மடமகள்***

***மன்ற வேங்கை மலர் சில கொண்டு***

***மலை உறை கடவுள் குல முதல் வாழ்த்தி***

***தேம்பலிச் செய்த ஈநுறுங்கையாள்"[13] (ஐங்.259, வ.1-4)***

என ஐங்குறுநூற்றுப் பாடல் ஒரு குற மகள் செய்த கடவுள் வழிபாட்டைத் தெரிவிக்கிறது. முருகன் இவர் வாழும் நிலத்துப் பெருந்தெய்வம் ஆகும். முருகனுக்கு வெறியாட்டு என்னும் முருக பூஜை செய்தும், குரவை கூத்து ஆடியும் வழிபாடு செய்வர். வெறியாடும்போது இவர்கள் முழக்கும் பறை "முருகியம்" எனப்படும். மடி வாய்த் தண்ணுமையும், தொண்டகப் பறையையும் முழக்குவர்.

### பொழுதுபோக்கு

குறவர் இரவில் ஊர் அம்பலத்தில் கூடிப்பேசிப் பொழுதினை போக்குவர். இதனைக் கபிலர்,

**"மன்றுபாடவிந்து மனைமடிந் தன்றே"[14] (அகம்.128, வ.1)**

என்பர். இங்கு மன்று என்பது ஊர்ப்பொது இடமாகிய அம்பலத்தைக் குறிக்கும். கானவர் இரவில் புலித்தோலால் செய்யப்பெற்ற படுக்கையில் உறங்குவர். இதனை,

**"வரியதன் படுத்த சேக்கை"[15] (அகம். 58, வ.4)**

என்று அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது. குறவர் வேலையில்லாத பொழுது கள்ளுண்டு மகிழ்ந்து பொழுதுபோக்குவர். கானவர் பகற்பொழுதில் கையாடு வட்டில் கொண்டு விளையாடிப் பொழுதுபோக்குவர். இதனை,

**"கை ஆடு வட்டின் தோன்றும்"[16] (அகம்.108, வ.17)**

என்று அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது. கையாடு வட்டி என்பது கையால் தட்டி விளையாடும் பந்து ஆகும். இது போன்ற பல்வேறு செயல்களில் ஈடுபட்டு பொழுதினை போக்கினர்.

### முடிவுரை

குறிஞ்சி நில மக்கள் இயற்கையில் கிடைக்கின்ற உணவுகளைச் சமைக்காமலும் வேட்டையாடி கிடைத்த மான், பன்றி போன்ற அசைவ உணவுகளைச் சமைத்தும் உண்டனர். குறிஞ்சி நில ஆண்களும் பெண்களும் கள்ளுண்டு மகிழ்ந்தனர். குறிஞ்சி நில மக்கள் பண்டமாற்று முறையை மேற்கொண்டுள்ளனர். பகற்பொழுதில் தினைப்புனம் காப்பதில் பொழுதினை கழித்தனர் இவர்களின் முக்கியத் தொழிலாக வேட்டையாடுதலை மேற்கொண்டனர். கடவுள் வழிபாடாக முருகனை வழிபட்டு வெறியாட்டு போன்ற பூஜைகளை செய்தனர். இதுபோன்ற குறிஞ்சி நில மக்களின் மானுடவியல் பண்புகள் பற்றி இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

### சான்றெண் விளக்கம்


1. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), நற்றிணை மூலமும் உரையும், பா.336.
2. இரா.செயபால் (உ.ஆ.), அகநானூறு மூலமும் உரையும், பா.348.
3. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), நற்றிணை மூலமும் உரையும், பா.80
4. மேலது. பா.337
5. இரா.செயபால் (உ.ஆ.), அகநானூறு மூலமும் உரையும், பா.302.
6. பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ.), பதிற்றுப்பத்து மூலமும் உரையும், பா.30.
7. வி.நாகராசன் (உ.ஆ.), குறுந்தொகை மூலமும் உரையும், பா.100
8. கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ.), நற்றிணை மூலமும் உரையும், பா.235.
9. மேலது. பா.108.
10. வி.நாகராசன் (உ.ஆ.), குறுந்தொகை மூலமும் உரையும், பா.273.
11. இரா.செயபால் (உ.ஆ.), அகநானூறு மூலமும் உரையும், பா.86.
12. மேலது. பா.136.
13. பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ.), ஐங்குறுநூறு மூலமும் உரையும், பா.259.
14. இரா.செயபால் (உ.ஆ.), அகநானூறு மூலமும் உரையும், பா.128.
15. மேலது. பா.58.
16. மேலது. பா.108.

**துணை நூற்பட்டியல்**


1. *ஆறுமுகம்.அ.,* *சங்க இலக்கியத்தில் குடும்பம் உடைமை அரசு*
*பாவேந்தர் பதிப்பகம்*
*சீரங்கம் 4/79, நடுத்தெரு, திருமழபாடி*
*அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம் 621851.*

2. *இராசாராம்.அ.,* *சங்க இலக்கியத்தில் நடைமுறை வாழ்க்கை*
*சபாநாயகம் அச்சகம், 176 வடக்கு வீதி*
*சிதம்பரம் 608001.*

3. *காந்தி.க.,* *தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்*
*சர்வதேச தமிழாய்வு நிறுவனம், 2 மெயின் ரோடு*
*சி.ஐ.டி. வளாகம், சென்னை 600113.*

4. *குருநாதன்.இரா.,* *குறிஞ்சி காட்டும் சமுதாயம், தமிழ்ச்சாரல், சென்னை*
*ஸ்கிரிப்ட் பிரிண்டர்ஸ், சென்னை 600024.*

5. *செயபால்.இரா.,* *அகநானூறு மூலமும் உரையும்,*
*பாவை பிரிண்டர்ஸ், 142, ஜானி ஜான்கான் ரோடு*
*இராயப்பேட்டை, சென்னை 600014.*

6. *சோமசுந்தரம்.பொ.வே.* *ஐங்குறுநூறு, அப்பர் அச்சகம், சென்னை 600108.*

7. *திலகவதி.க.,* *சங்ககால மகளிர் வாழ்ந்த சமுதாயச் சூழல்,*
*பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு 1966.*

8. *பாக்கியமேரி.எஃப்.* *தமிழர் பண்பாடும் பயன்பாடும்*
*அஞ்சனக் கிமிழப் பதிப்பகம், 10/2 சீனிவாசா சாலை*
*மயிலாப்பூர், சென்னை 600 004.*

9. *வரலட்சுமி.இரா.,* *சங்க இலக்கியங்களில் மானிடவியல் கூறுகள்*
*திருவள்ளுவர் கணினி நிலையம்*
*1261, 18ஆம் கிழக்கு தெரு,*
*மகாகவி பாரதி நகர், வியாசர்பாடி, சென்னை 600039.*